விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 மார்சழி 4 ஜ. ஆகிர் பிறை 1 இதழ்: 238

யாழ்ப்பாணம் புதன்கிழமை 19-12-1990


## கிழக்கில் நோயாளர் பாதிப்பு 235 டாக்டர்கள் உடன் தேவை

(மட்டக்களப்பு)

மட்டு அம்பாறை மாவட்டங்களிலுள்ள பல அரசினர் வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் இல்லாத காரணத்தால் சீரான சுகாதரசேவை பொதுமக்களுக்கு வழங்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அகதி முகாம்களிலும் மற்றும் காடுகளிலும் வாழும் மக்களுக்கு உரிய சுகாதார சேவைகள் வழங்க முடியாமைக்கு இதுவும் ஒரு காரணமென்று கூறப்படுகிறது.

235 வைத்தியர்கள் உடனடியாக இம்மாவட்டங்களில் நியமனம் செய்யப்பட வேண்டும் என்று சுகாதாரப்பகுதி

(3-ம் பக்கம் பார்க்க)

## அடையாள அட்டைகள் யாழ். வந்து சேர்ந்தன

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஊடாக கடந்த ஜூன் மாதம் 10-ந் திகதிக்கு முன்பாக விண்ணப்பித்திருந்த இரண்டாயிரம் அடையாள அட்டை விண்ணப்பதாரிகளுக்கு தேசிய அடையாள அட்டைகள்

(3-ம் பக்கம் பார்க்க)

### திருமலையில் புலிகளின் கண்ணிவெடியில்

# இராணுவ தளபதி, பொலிஸ் அதிபர் உட்பட ஐவர் பலி!

(திருமலை)

திருமலையில் பன்மதவாச்சி என்னுமிடத்தில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கிய திருகோணமலை மாவட்ட இராணுவத் தளபதியான பிரிகேடியர் ஒருவரும், பொலிஸ் அதிபர் ஒருவரும் உட்பட ஐந்து படையினர் ஸ்தலத்திலே பலியானார்கள்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் இராணுவ பிரிகேடியரான லக்ஸ்மன் வீரரத்ன, பொலிஸ் அதிபர் றிச்சர்ட் விஜயசேகரா ஆகியோரே கொல்லப்பட்டவராவார்கள்.

வேப்பங்குளம் சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று நண்பகல் பன்குளத்திற்கு இரண்டு வாகனங்களில் சென்ற படையினர் மீது, பன்மதவாச்சியில் வைத்துப் புலிகள் தாக்குதல் நடத்தினர்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் 20,000 அகதிகள்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் பெய்துவரும் பெரும் மழையால் ஆலையடிவேம்பு, பொத்

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். சான்றிதழுக்கு கொழும்பில் பரீட்சை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலிருந்து கொழும்புக்கு வந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வைத்தியபீட மாணவர்களுக்கான முதலாம் வருட வைத்தியபீட பரீட்சை இம்மாதம் 20-ம், 27-ம் திகதிகளில் நடைபெறும்.

இப்பரீட்சையில் சித்தி அடையும் மாணவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சான்றிதழ்கள் வழங்கப்படும்

(4ம் பக்கம் பார்க்க)

## தொண்டர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை இன்று காலை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

இம்மாதம் 29-ம் திகதிவரை மேற்படி நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ளது. [153]

## மாங்குளத்தை மீட்க 108 புலிகள் உயிர்த்தியாகம்!

(யாழ்ப்பாணம்)

மாங்குளம் இராணுவமுகாம் மீதான தாக்குதலில் 108 விடுதலைப் புலிப் போராளிகள் தமது இன்னுயிரைத் தியாகம் செய்துள்ளனர்.

இம்முகாமிலிருந்து படையினரை வெளியேறவிடாது தமது கட்டுப்பாட்டிற்குள் புலிகள் வைத்திருந்த காலம் தொடக்கம் முகாமினை நிர்மூலமாக்கிய காலம் வரை 108 புலிகள் தமது இன்னுயிரை அர்ப்பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இராணுவ நடவடிக்கைக்கு உதவியதற்கு சீனவுக்கு நன்றி

(கொழும்பு)

வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகளுக்கு உதவி வருவதற்காக சீன பிரதமர் லீ பெங்கிற்கு ஜனாதிபதி ஆர் பிரேமதாசா நன்றி தெரிவித்தார்.

இரு தலைவர்களுக்குமிடையே

(4-ம் பக்கம், பார்க்க)

## மாகாண சபைகள் வரி அறவிட அனுமதி!

(கொழும்பு)

சகல மாகாண சபைகளும் அடுத்தாண்டு முதல் வரிகளை அறவிட மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

மாகாணசபை சட்டமூலத்திற்கு அமைவாக இதுவழங்கப்பட்டிருப்பதாக மாகாண சபை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

வாகன அனுமதிப்பத்திரங்களை மாகாண அமைச்சுக்கள் வழங்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. [எஸ்]

## நிவாரணப் பொருட்களை உரிய தேதியில் பெறாதவர் இனிமேல் பெறமுடியாது

(காங்கேசன்துறை)

நிவாரண பொருட்களை உரிய திகதியில் பெற்றுக் கொள்ளாதவர்கள் அதனை இழந்ததாகவே கருதப்படுவர் என அறிவிக்கப்படுகிறது.

இதுவரை வழங்கப்பட்டுள்ள இடம் பெயர்ந்தோருக்கான 4ம் கட்ட நிவாரணத்தில் சில கட்டங்களைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் உதவி அரசாங்க அதிபர்கள் மட்டத்தில் தொடர்பு கொண்டபோது இனிமேல் அதுபற்றி எதுவும் செய்யமுடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (86)

## 2-ம் கட்ட விசேடநிவாரணம் இன்றுமுதல் விநியோகம்

(யாழ்பாணம்)

விசேட இலவச உணவு நிவாரண திட்டத்தின் 2-ம் கட்ட நிவாரணம் இன்று முதல் யாழ். மாவட்டத்தில் விநியோகிக்கப்படவுள்ளது.

ஏற்கனவே நடைமுறைப்

(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் குழந்தைகளுக்கு வயிற்றோட்ட நோய்

(கொழும்பு)

கொழும்பில் நூற்றுக்கணக்கான குழந்தைகளுக்கு வயிற்றோட்ட நோய் பரவிவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பல வைத்தியசாலைகளில் வயிற்றோட்ட நோய் காரணமாக இடநெருக்கடி இருந்து வருவதாகக் கூறப்படுகிறது.

இந்நோய் கிராண்பாஸ், தெமட்டக்கொட, பாலத்துறை, மட்டக்குளிய, முகத்வாரம் பகுதியில் அதிகமாகப் பரவியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது. (எஸ்)

## வடபகுதி கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் கொழும்பில் காணமல் போகிறதாம்

(மானிப்பாய்)

கடவுச்சீட்டில் படம் மாற்றுதல், பெயர் மாற்றுதல் மற்றும் திருத்தங்கள் செய்யச் செல்வோர் புதிய கடவுச்சீட்டுக்கு மீண்டும் விண்ணப்பிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் வடபகுதியிலிருந்து தமது கடவுச்சீட்டில் தங்கள் உருவப்படங்களையும், மற்றும் திருத்தங்களையும் செய்ய கொழும்பு குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்குச் சென்றவர்களுக்கு அவர்

(3-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்து மடல்களை மொத்த மாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (வியா பாரிகளுக்கு விசேட கழிவு உண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256, பருத்தித் துறை வீதி, நல்லூர்; ''அரவி ஜவுளியகம்'' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(சி-4158)

### EASY ENGLISH

ஆங்கிலம்கற்பிக்கு கைநூலா கவும் A/L, O/L மாணவர் கள் இலகுவாக ஆங்கிலம் கற்றுக்கொள்ள உதவியாக வெளிவந்துள்ளது. EASY ENGLISH விலை ரூபாய் அறு பது. புத்தக நிலையங்களில் பெற்றுக்கொள்ளவும்.
(சி-4181)

### வகுப்புக்கள்

Spoken English O/L வினு விடை வகுப்புக்கள் மற்றும் எல்லா வகுப்புக்களுக்குமான சகல பாடங்களும் நடைபெறு கின்றன. Jsoo Chang Institute அராலி வடக்கு, வட்டுக் கோட்டை. (சி-4185)

### தேவை

வெற்று வெள்ளை முழுப் போத்தல், சீமெந்து பாக், கோழித்தீன் பாக் தேவை; மில்க்வைற் யாழ்ப்பாணம்.
(சி 940)

### வேலையாட்கள் தேவை

திருநெல்வேலி சந்தியிலுள்ள மணிக்கூடு திருத்தும் நிறுவ னத்துக்கு மணிக்கூடு திருத்து வதில் அனுபவமிக்கவர்கள் தேவை. நேரில்வரவும். டயா எலெக்ரோனிக் கொம்பிளக்ஸ், 6, பலாலி வீதி. திருநெல் வேலிச் சந்தி. (சி 4191)

### மலிவு 31வரை மட்டும்

நீடிக்கப்படமாட்டாது; மீரா வெளியீடுகளாக வெளிவந்த உயிரோட்டமான நாவல்கள். 100/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40-/ரூபா வுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ்சுன்னாகம், திருக் கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர்.
(சி 4189)


## விசேட முற்பணச் சுற்று நிருபம்

[மானிப்பாய்]

அரசாங்க ஊழியர்களுக்கு விசேட முற்பணமாக ரூபா 500 வழங்கப்படும்.

இப்பணம் மாதமொன்றுக்கு 3 ரூபா 22 சதவீத வட்டி யுடன் 10 மாதங்களில் திருப் பிப் பெறவேண்டுமென அறி விக்கப்பட்டுள்ளது; (71)

## ஓய்வூதியம் பெறுவோரின் இலவச பயண பத்திரம் ஜனவரியில் வழங்கப்படும்

[மானிப்பாய்]

ஓய்வூதியம் பெறுபவர் களின் இலவச புகையிரத அனுமதிப்பத்திரம் 1991 ஜன வரி முதலாந்திகதி முதல் உதவி அரசாங்க அதிபர் அலு வலகங்கள் மூலம் வழங்கப் படவுள்ளன.

இதனால் இதுவரை கால மும் தமது புகையிரத ஆணைச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள கச்சேரிகளுக்கு அலைந்து திரிந்த ஓய்வூதிய காரர் நன்மையடையவுள்ள னர்; [71]

## 26 மாணவர்கள் பல்கலைக்கழகம் தெரிவு

(பண்டத்தரிப்பு)

அண்மையில் வெளியான க. பொ. த. உயர்தர பரீட் சையின் வெட்டுப்புள்ளி அட்ட வணையின் பிரகாரம் தெல்லிப் பழை மகாஜனக் கல்லூரியிலி ருந்து பல்கலைக்கழகத்திற்கு 26 மாணவர்கள் செல்லவுள்ள னர்.

பொறியியல்துறைஒன்றுக்கு இருவரும், பொறியியல்துறை இரண்டுக்கு ஒருவரும், பௌதிக விஞ்ஞானத்துக்கு ஆறு பேரும். உயிரியல் விஞ் ஞானத்துறைக்கு மூன்று பேரும், முகாமைத்துவத் துறைக்கு மூன்றுபேரும், வர்த்தகத்துறைக்கு மூன்று பேரும், கலைத் துறைக்கு எட்டுப்பேரும் பல்கலைக்கழகத் துக்கு செல்வதற்கு தகைமை பெற்றுள்ளனர். இக்கல்லூரி யில் வர்த்தகத்துறையில் உச் சப் புள்ளியாக 296 புள்ளியும் கலைப்பிரிவில் உச்சப்புள்ளியாக 282 புள்ளியும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது; இத் தக வல்களை கல்லூரி அதிபர் திரு. க. நாகராஜா தெரிவித் தார். (72)

## ஆந்திரா முதல்வர்

[சென்னை]

ஆந்திரா மாநில முதலமைச் சராக திரு. ஜெனர்த்தன ரெட்டி நேற்று பதவியேற்றார்.

திரு. சென்னரெட்டி, ஆந் திராவில் ஏற்பட்ட இந்து- முஸ்லிம் கலவரத்தைத் தொடர்ந்து தமது பதவியை ராஜினமாச் செய்தது குறிப் பிடத்தக்கது. (மா)

## மரண தண்டனை


(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டியைச் சேர்ந்த அருமைத்துரை குணசேகரம் என்பவருக்கும் எஸ். தவம் என்பவருக்கும் நேற்று விடு தலைப் புலிகளினால் மரண தண்டனை வழங்கப்பட்டது.

கொலைக் குற்றம் தொடர் பாகவே இவர்கள் இருவருக் கும் மரணதண்டனை வழங் கப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது. (ரி-வி)


## 7-வது ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 26 | 06 | 1960



இறப்பு: 19 | 12 | 1983

★★

### க. அன்ரன் ஜோர்ஜ் [ரஜனி]

ரஜனி எம் நண்பன்
அன்பே அவன் வாழ்க்கை
கருணை ஒளிவீசும் - அவன்
கண்கள் மணித்தீபம்
ஒருநாளும் மாறாத சொந்தம் - நீ
உயிரோடு உயிர்சேர்ந்த பந்தம் - நீ
ஏழேழு ஜென்மங்கள் சென்றாலும்
எம் நெஞ்சில் வாழ்பவன் நீ.
எவ்வாண்டாயினும் என்றும் எம்மில்
நிலைத்திருப்பாய்;

உன் பிரிவால் துயருறும்,
பெற்றோர், சகோதர, சகோதரிகள்.
உறவினர். நண்பர்கள்.

(சி4188)



## எங்கள் பேரின்பம்

ஆழக் கற்றுத் தேர்ந்தவன் அறிஞனாக வாழ்ந்தவன்
அன்புகொண்ட நெஞ்சினால் அனைவரையும் சேர்த்தவன்
வாழத்துடித்த மக்கள் மீது வாஞ்சை கொண்டு
வாழ்ந்தவன்
வள்ளல் போல மனமிரங்கி வாழ்வில் ஒளிசேர்த்தவன்

சமரசத்தை நாளும் வாழ்வில் சார்ந்து நின்று
வாழ்ந்தவன்
சமபந்தி மூலம் போசனத்தை ஊட்டி வைத்த
தாயவன்
அமரரான 'ஹன்டி' எங்கள் பேரின்பமாகக்
கொள்ளுவோம்
அவரின் ஆன்மா சாந்தி கொள்ள ஆண்டவனைப்
போற்றுவோம்.

ஆ. கல்யாணசுந்தரேசன்

[இன்று ஹன்டி பேரின்பநாயகம் 3-வது ஆண்டு நினைவுதினம்.]


## கசிப்பு ஒழிப்பில் புலிகள் தீவிரம்

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியினரின் தீவிர கசிப்பு ஒழிப்பு முயற்சி யால் பலகசிப்பு உற்பத்தியா ளர்கள் கைது செய்யப்பட்ட துடன் உற்பத்திப்பொருட்கள் சேதப்படுத்தப்பட்டு உற்பத்தி யாளருக்கு தண்டனைகளும் வழங்கப்பட்டுள்ளது,

பருத்தித்துறை, வதிரி, வல்வை போன்ற இடங்களில் பெருமளவில்கசிப்பு உற்பத்திப் பொருட்களுடன் உற்பத்தியா ளர்களும் கைது செய்யப்பட் டார்கள்.

மேற்படிநபர்களுக்கு மக்கள் முன்னணியினரால் கடும் தண் டனை வழங்கப்பட்டுள்ளது.

## தென் தமிழீழ நிதி உதவி 100ரூ. வீதம்வழங்க ஆசிரியர்கள் முடிவு

(உடுவில்)

தென் தமிழீழ மக்களுக்கு உதவிகள் வழங்குவதற்கான கூட்டம் சுன்னாகம் இராமநா தன் கல்லூரியில் நடைபெற்ற போது மருதனுமடம் கோட் டத்தைச்சேர்ந்த பாடசாலை ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் நூறு ரூபாவுக்கு குறையாமல் வழங்குவதென முடிவுசெய் யப்பட்டது.

இக்கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் கொத் தணி அதிபர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் இவ் வாறு முடிவு எடுக்கப்பட்டது.

ஒவ்வொரு பாடசாலை அதி பர்களும் தமது பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து பெறப் பட்ட பணத்தினை 22ம் திக திக்கு முன்னர் ஒப்படைக்க வேண்டுமெனவும் அறிவிக்கப் பட்டுள்ளது. (109)

## இளம் பெண் தற்கொலை

(பூநகரி)

பூநகரியிலுள்ள மட்டுவில் நாடு மேற்குப் பகுதியைச் சேர்ந்த செல்வி கனகரத்தி னம் பிறேமா (வயது 21) என்ற இளம் பெண் நஞ்சருந் தித் தற்கொலை செய்து கொண்டார்.

காலமானவர் வாடியடிக்குச் சென்று கிராமசேவையாள ரைச் சந்தித்து வருவதாக வீட் டில் கூறிவிட்டு சென்றவர் வீட்டுக்கு அப்பால் நஞ்சருந் தித் தற்கொலை செய்துகொண் டார் என்று கூறப்படுகிறது.

## சுகாதாரமற்ற நிலையில் பாண் விற்பனை

[காங்கேசன்துறை]

வீதிக்குவீதி சந்திக்கு சந்தி தற்போது பாண் விற்பனை இடம்பெறுவதால் சுகாதார விதிமுறைகள் பேணப்படுவ தில்லையென மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

சுகாதார பரிசோதகர்கள் இதுகுறித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோருகின்றனர். (86)

## திரும்ப வழங்கப்படும்

(கல்முனை)

சாய்ந்தமருதுமக்கள்வங்கிக் கிளையில் அடைவுவைக்கப் பட்ட நகைகள் இம்மாதம் இருபதாம்திகதி கல்முனை மக் கள் வங்கிக் கிளையில்வைத்து வழங்கப்படும், இதற்கான சகல நடவடிக்கைகளையும் பிர தேச மக்கள்வங்கி செய்துள் ளது;

## தப்பியோடும் சொந்தங்கள்

தாம் பிறந்து வளர்ந்த பூமியிலேயே அந்நியர்களாக்கப்பட்டு, அகதிகள் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ள தமிழ் பேசும் மக்கள் சர்வ தேச நாடுகளுக்கு தப்பி யோடுவதும, தஞ்சம் கோருவதும் புரிந்து கொள்ளக்கூடிய பிரச்சனை!

ஆனால் அரசின் 'சொந்தங்களும்', செல்லப் பிள்ளைகளும் நாட்டை விட்டோடுவதும் அந்நிய நாடுகளில் தஞ்சம் கோருவதுமே எமக்கு புரியாத புதிராக உள்ளது!

ஆரம்பகாலத்தில் அரசின் சொந்தங்கள் சந்தர்ப்பம் கிடைத்த போது மட்டும் கல்விக்கும் காசுபணம் தேடவும் வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டனர். அரசின் செல்லப் பிள்ளைகளோ தமது மத உணர்வலைகளை மோத விட்டு வளைகுடா நாடுகளை வேலைதேடி ஆக்கிரமித்தனர்.

இன்றோ அனைத்து மக்களும் நாட்டை விட்டு ஓடுவதுடன் இலங்கை தூதரக அதிகாரிகளும் தூதரகங்களை கைவிட்டு வெளிநாடுகளில் தஞ்சம் கோரி மிச்சம் மீதமான பஞ்சப்பாட்டையும்சர்வ தேச அரங்கில் அம்பலப் படுத்தியுள்ளனர்.

ஒரு நாட்டின் தூதரகம் என்றால் அது, அந் நாட்டின் செழிப்பு. செல்வாக்கு, மதிப்பு, மரியாதை அனைத்தையும் வெளி உலகுக்குத் துலங்கவைக்கும் தேச ஒளி விளக்காகும்?

அத்தகைய ஒளி விளக்கைத் துலங்க வைக்கும் அதிகாரிகளே அங்கிருந்து வெளியேறித் தஞ்சம் கோரும் அளவுக்கு எமது நாட்டின் மானமே கப்பல் ஏறியுள்ளது!

இத்தகைய இழி நிலை ஒரு நாட்டில் மட்டுமல்ல அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து போன்ற பல நாடுகளில் அதுவும், சிங்கள, முஸ்லிம் அதிகாரிகளினாலேயே உருவாகியுள்ளது.

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில், இரு தூதரக அதிகாரிகள் இலங்கை திரும்ப மறுத்துள்ளதுடன் அவர்களின் இடங்களுக்கு நியமனம் பெற்ற புதியவர்களுக்கு விஸா வழங்கவும், கனடா அரசு மறுத்துள்ளதாம்!

உலகில் எங்கும் வாழலாம் தம் சொந்த நாடான இலங்கையில் வாழமுடியாது என்பதை சொந்தபந்தங்களே நிரூபித்து வருவது பரிதாபகரமானது.

# "மரணத்தின் பிடியில் சிக்கித் தவிக்கும் தென் தமிழீழ மக்களுக்கு உதவுங்கள்"

## மகளிர் பொறுப்பாளர் 'மாலினி' வேண்டுகோள்

(அல்வாய் வடக்கு பாடசாலையில் தென் தமிழீழ மக்களுக்கு ஆதரவு தெரிவித்து நடந்த கூட்டத்தில், விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட மகளிர் பொறுப்பாளர் 'மாலினி' நிகழ்த்திய உரை.)

விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் வடக்கில் இராணுவம் முகாமில் முடக்கப்பட்டிருக்கிறது. இதேவேளை நீங்கள் அமைதியாக வாழ்கிறீர்கள்: நிம்மதியாக உறங்குகிறீர்கள், களியாட்டங்கள், திருவிழாக்கள், கொண்டாட்டங்களில் கலந்து கொள்கிறீர்கள். இதேவேளை, தென்தமிழீழ மக்கள் படும் வேதனை கொஞ்ச நஞ்சமல்ல;

### இனத்தை அழிக்கத் திட்டம்

தமிழ்ப் பிரதேசங்களில் தேசிய விடுதலைப் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கிறது. அதேவேளை தென் தமிழீழ மக்கள் பொருளாதாரம் உட்பட பலதரப்பட்ட துன்பங்களை தினமும் அனுபவித்து வருகின்றனர். அரசாங்கம் கிழக்கில் எம்மினத்தை அழிக்க திட்டமிட்ட சக்திகளை உருவாக்கி வருகிறது.

அங்கே கொடுமைகள் பல கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. அப்பகுதியில் 90 வீதமான தமிழர் வாழ்ந்த பிரதேசத்தில் சிங்களவர்களாலும், குண்டர்களாலும், இராணுவத்தினராலும், முஸ்லிம்களினாலும் எமது உடன்பிறப்புக்கள் அடித்துத்துரத்தி துன்பப்பட்டு சகலதும் இழந்த நிலையில் காடுகளிலும், தெருவோரங்களிலும், வயல்களிலும். கொட்டும் மழையிலும் வெய், யிலிலும் சிக்குண்டு விரோதிகளின் கண்ணுக்கு எட்டாமல் கண்ணீர் விட்டுக் கலங்கிய வண்ணம் இன்னல் படுகின்றனர். இரவு பகல் என்றில்லாமல் எமது மக்கள் கொல்லப்படுகின்றனர். பாலியல் வன்முறைக்கு பெண்கள் ஆளாக்கப்படுகின்றனர். இவை அங்கு நாளாந்த நிகழ்வாக மாறிவிட்டன. பெண்கள் கர்பூகிய நிலையிலும், கூந்தல் குலைந்த நிலையிலும் மனநோயாளிகளாக காணப்படுகின்றனர்;

### சிக்கித் தவிக்கின்றனர்

அங்குள்ள ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் பலரும் இராவத்தினரதும், காடையர்களினதும், முஸ்லிம்களினதும் இரும்புக் கரங்களில் சிக்கித் தவிக்கின்றனர். தமிழ்க் கிராமங்கள் சுடுகாடாக காணப்படுகிறது; தமிழ் மக்களது வீடுகள், வர்த்தக நிலையங்கள் தொழில் நிறுவனங்கள், தனியார் கட்டிடங்கள், பாடசாலைகள் யாவும் அழிக்கப்பட்டு வருகின்றன.

அம்பாறையில் 13 தமிழ்க் கிராமங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. அங்கு ஒரு தமிழர்கூட இல்லை. இராணுவத்தினர் பல குடும்பங்களைக் கைதிகளாக வைத்திருக்கின்றனர். அவர்கள் இருக்கின்ற முகாமைச் சூழ மிதிவெடிகள், தரை வெடிகள் புதைக்கப்பட்டிருக்கின்றன. விசாரணைக்காக கூட்டிச் செல்லும் ஆண்கள் கொல்லப்பட்டும் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டும் ஆறு, கிணறு, ஏரிகள், வாவிகளில் சடலங்கள் மிதக்கின்றன.

பாலியல் வன்முறைக்கு இராணுவத்தினரால் பெண்கள் உட்படுத்தப்பட்ட பின் முஸ்லிம்களிடம் ஒப்படைக்கப் படுகின்றனர். அவர்கள் முஸ்லிம் இஸ்லாமிய சட்டப்படி குற்றப்பட்ட பெண்ணுக்கு பல தடவைகள் கற்களாலேயே எறிந்து கொன்றுவிடும் சம்பவங்கள் அங்கு காணமுடிகிறது. மகளை மானபங்கப்படுத்திவிட்டு அதேகோலத்தில் தந்தையை அழைத்துக் காட்டப்படுகிறது. வேதனை தாங்காத தந்தை தற்கொலை செய்து கொள்கிறார். இதேநிலையில் எமது உதவிகளையே அப்பகுதி மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். மரணத்தின் பிடியில் இருக்கும் எமது கிழக்குப் பகுதிச் சகோதரர்களுக்கு பணமாகவோ, உடையாகவோ உணவாகவோ உதவிகளைப் புரிந்து அவர்கள் தினமும் விடுகின்ற இரத்தக் கண்ணீரை உங்கள் அன்புக் கரங்களால் துடையுங்கள். அவர்களின் பட்டினி வாழ்க்கையிலிருந்து மீட்சிபெற உதவுங்கள். (150)

## இராசி பலன்

**19-12-1990**

**புதன்கிழமை**

துதியை பி. ப. 2-08 வரை, பூராடம் பி. ப. 12-04 வரை, இராகுகாலம் 12-33 முதல் 1-53 வரை. அமிர்தயோகம், நல்லநேரம் மாலை 4-53 முதல் 6-23 வரை.

மேடம் - ஞாபகக் குறைவு, பயண அலைச்சல், நண்பர்கள் விரோதம், குடும்பக் கவலை.

இடபம்-அபகீர்த்தி, நோய் தணியும், சத்துரு பயம், தொழில் போட்டி.

மிதுனம்-தனலாபம், அதிகாரிகள் பாராட்டு. குடும்ப மகிழ்ச்சி, உல்லாசப் பயணம்.

கடகம்- வேண்டிய வை கிடைத்தல், புதிய பதவி, குடும்பக் கருத்துமோதல், நண்பர் உதவி.

சிங்கம்- மனப்போராட்டம், காரியத் தாமதம், குடும்பப் பிரிவு. அதிக செலவு.

கன்னி-வேலைப்பளு, அகால போஜனம், அலைச்சல் மிகுதி, பொதுப்பணி, அதிகாரம்.

துலாம் - எண்ணம் போல் வாழ்வு, புதிய சிந்தனை, தொழில்லாபம், குடும்பஉறவு.

விருச்சிகம்-போட்டி மனப்பான்மை, பயணங்களால் தொல்லை, குடும்பச் சந்தேகம், தொழில்குறைவு.

தனுசு-மாதா வழிக் கவலை, பொருளாதார மேம்பாடு, தொழில் லாபம், குடும்ப நன்மை.

மகரம்-கடன் தொல்லை, தொழில் பிணக்கு, அதிகாரப் போராட்டம், குடும்பப் பிரிவு.

கும்பம்-மனித நேயம். தானதர்மம், மனைவியால் நன்மை, குடும்ப மகிழ்ச்சி, புதியஉறவு.

மீனம்-பரோபகாரம், குடும்பச்செலவு, தொழில்மாற்றம். நண்பர் உதவி, புகழ்.

ஜோஸ்யர்.

எமது நாட்டில் பசி, பட்டினி, பஞ்சம், படுகொலைகள் யுத்த கெடுபிடிகள் அனைத்தும் எல்லைமீறி தலைவிரித்தாடுகிறது என்ற உண்மை சர்வதேச அரங்கில் அப்பட்டமாக ஊர்ஜிதமாகி வருவதையே இது புலப்படுத்துகிறது;

— மயூரன்

## 6000 பேருக்கு உணவு வழங்க நடவடிக்கை

[கிளிநொச்சி]

கிளிநொச்சி மாவட்டத்தில் 19 கிராமங்களை சேர்ந்த சுமார் ஆறுயிரம் பேருக்கு உலர் உணவு வழங்க மாவட்ட அரச அதிபர் கே. மாணிக்கவாசகர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த நிவாரண உதவி 1500 ரூபாவிற்கு மேல் சம்பளம் பெறும் அரசாங்க ஊழியர்களுக்கும் கிடைக்கவும் அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதேவேளை சுமார் 70 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் செஞ்சிலுவை சங்க லொறிகளில் கிளிநொச்சிக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. [83 - ரி)

### கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக அரசாங்கத்திற்குப் பல தடவைகள் கோரிக்கை விடப்பட்டபோதிலும் இவ்விடயத்தில் அரசு அசமந்தப் போக்கைக் கடைப்பிடிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

### அடையாள

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று யாழ். செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளது.

இந்த தேசிய அடையாள அட்டைகளும் உரியவர்களின் தபால் விலாசத்திற்கு விரைவில் அனுப்பப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (153)

### வடபகுதி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் முன்பு விண்ணப்பித்த விண்ணப்பப் படிவங்கள்காணாமல் போயுள்ளதால்தற்போது வைத்திருக்கும் கடவுச்சீட்டை அவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாமல் உள்ளதாவும் புதிதாக கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்குமாறும் கூறப் படுகின்றதாம்,

இதனால் இவர்கள் மீண்டும் புதிய விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து சகல ஆவணங்களுடனும் பெறுமதியான முத்திரைக் கட்டணங்களும் செலுத்தவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (71)

## பலதும் பத்தும்

### தமிழ்ப் புலமை பெற்றவர்

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நீண்டகாலமாக தலைவராகப் பணி புரிந்தவர் டன் சுவாமிகள் என அழைக்கப்பட்டவர் வணக்கத்துக்குரிய பற்றிக் அடிகளார். இவர் கல்லூரியின் தமிழ் பண்டிதர் சுபவாக்கியம்பிள்ளையுடன் சேர்ந்து தமிழ்ப்புலமை பெற்றுத் தேறினார். இவர் 1900ம் ஆண்டு சுபவாக்கியம்பிள்ளையுடன் இணைந்து ஆங்கில தமிழ் அகராதியொன்றினை வெளியிட்டார். தமிழ் மொழிக்கான சுருக்கெழுத்துமுறையொன்றினையும், வகுத்தமைத்து 'தமிழ் தீவிர லிகிதம்' என்னும் பெயருடன் வெளியிட்டார்;

• ஞானி

# தேசிய பாடசாலைக்கான அமைச்சு சுற்றுநிருபம்

(யாழ்ப்பாணம்)

தேசிய பாடசாலையாக தரமுயர்த்துவது குறித்து உயர் கல்வி அமைச்சு நிபந்தனைகளுடன் கூடிய சுற்று நிருபங்களை கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ளது.

இச்சுற்று நிருபத்தின் பிரகாரம் பாடசாலை இடாப்பிலுள்ள மொத்த மாணவர் தொகை 2000 அல்லதுஅதற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும். கடந்த 3 வருடங்களில் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையின் அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்ற மாணவர்களில் நூற்று வீதம் ஒவ்வொரு ஆண்டும் 33.1/3 அல்லது அதற்கு மேலாக இருத்தல் வேண்டும் க.பொ.த. (உயர்தரம்) விஞ்ஞான பிரிவிலுள்ள மாணவர் தொகை 200 க்கு மேற்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

சகல மாணவருக்கும் போதிய கட்டிட தளபாட வசதிகள் மற்றும் தொழில் நுட்ப பாடங்களுக்கு போதிய வசதிகள் இருத்தல் வேண்டும். க.பொ.த. (உயர்தர), க.பொ.த. (சாதாரண) வகுப்புகளிலுள்ள சகல மாணவர்களுக்கும் ஆய்வுகூட வசதிகள் இருத்தல் அவசியம்.

வசதிகள் சேவைக் கட்டண வருமானம் வருடமொன்றுக்கு 1500 ரூபாவுக்கு மேற்பட்டதாய் இருக்கவேண்டும். அப்பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் பிரபலமான பாடசாலையாக இருப்பதுடன் சக்திவாய்ந்த பாடசாலை அபிவிருத்தி சபை, பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் ஆதரவையும் பெற்றிருத்தல்வேண்டும். (153)

## படகுச்சேவை

[பளை]

கிளாலி - பூநகரி படகுச் சேவையை பெருமளவு பயணிகளும், வியாபாரிகளும் பயன்படுத்தி வருவதாக தெரிய வருகிறது.

தனி ஆளுக்கு ரூபா 30ம், சைக்கிள்களுக்கு ரூபா 10ம், மோட்டார் சைக்கிளுக்கு ரூபா 35ம் ஒருவழிக் கட்டணமாக அறவிடப்படுவதாகச் சங்கச் செயலாளர் பே. ஜேசுதாசன் தெரிவித்தார்.

## மீனவர்கள் பாதிப்பு

(வட்டுக்கோட்டை)

எழுவைதீவு, பருத்தித்தீவு, அனலைதீவு கரையோரக் கடற்பிரதேசத்திற்கு வள்ளத்தில் சென்று, மீன்பிடித்தொழில் புரிந்துவந்த காரைநகர் தோப்புக்காட்டைச் சேர்ந்த சுமார் 250 மீன்பிடித்தொழிலாளர்கள் இன்றைய சூழ்நிலை காரணமாகத் தொழில் வாய்ப்பின்றி பெரும் கஷ்டப்படுகின்றனர். (139)

## பிரவேசப் பரீட்சை முடிவு இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள தேசிய பாடசாலைகளான யாழ். இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் ஆண்டு 6 வகுப்புகளுக்கான புதிய மாணவர்களை அனுமதிக்கும் பிரவேசப் பரீட்சை பற்றி எந்தவித முடிவும் எடுக்க இயலாமல் இருக்கிறது.

கொழும்பிலுள்ள உயர் கல்வி அமைச்சின் பதிலை மேற்படி இரு தேசிய பாடசாலைகளும் எதிர்பார்த்து இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (153)

## தரமற்ற உணவு

(பளை)

பளை அரசினர் வைத்திய சாலையில் நோயாளர்களுக்கு தரமற்ற உணவுகள் வழங்கப்படுவதாக நோயாளர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

## அதிபர்கள் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

மருதனுமடக்கல்வி கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இம்மாதம் 21-ந் திகதி காலை 10 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. (153)

### 2ம் கட்ட

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

படுத்தப்பட்ட பங்கீட்டு அளவுத் திட்டத்தின் அடிப்படையில் இந்த நிவாரணப் பொருள்கள் வழங்கப்படும்.

கூடுதலாக உணவுப்பொருள்களை வைத்திருக்கும் ப. நோ. கூ. சங்கங்களிலிருந்து குறைவான பொருள்கள் கையிருப்பிலுள்ள சங்கங்களுக்கு உணவுப் பொருள்களை மாற்றுவதற்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதாக யாழ். உணவுக்கட்டுப்பாட்டதிகாரி செ. இ. நித்தியராஜ் தெரிவித்தார்.

இந்த நிவாரணப் பொருள்கள் சீரானமுறையில் விநியோகிக்கப்படுவது குறித்து தான் தீவிரமாகக் கண்காணித்து வருவதாகவும் அவர் கூறினார். (153)

# திருட்டு சைக்கிள் உதிரிபாகம் விற்பனை

(காங்கேசன்துறை)

சைக்கிள்கள் திருடப்பட்டு உடனுக்குடன் உதிரிப் பாகங்களாக்கப்பட்டு விற்பனைசெய்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சைக்கிளைத் திருடுவோர், அதனை விற்க முயலும்போது சில சமயங்களில் அகப்பட்டுக்கொள்வதாலேயே இந்தப் புதிய யுக்தியைக் கையாளத் தொடங்கியுள்ளனர். (68)

# ஆசிரியர் கலாசாலை பயிற்சி சான்றிதழ்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலையில் 1984-1985 கல்வி ஆண்டில் ஆசிரியப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் சான்றிதழ்கள், தற்போது கிடைக்கப் பெற்றுள்ளதாகக் கலாசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கான இறுதிப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தவர்களது பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப் பத்திர உண்மைப் பிரதிகளையே கல்வி அமைச்சு தற்போது அனுப்பி வைத்துள்ளது.

இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் நேரில் பெற்றுக் கொள்ளலாம் எனமேற்படி ஆசிரிய கலாசாலை அதிபர் தெரிவித்தார். (139)

### இராணுவ

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நடைபெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி பிரேமதாசா இந்த நன்றியறிதலைத் தெரிவித்தார்.

1991ம் ஆண்டு தொடக்கம் 1995ம் ஆண்டு வரை இலங்கைக்கு வட்டியில்லாக் கடன் வழங்கவும், மேலும் பல இராணுவத் தளபாடங்கள் வழங்கவும் சீனப் பிரதமர் இலங்கை ஜனாதிபதியிடம் வாக்குறுதி அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

# 1500 நெசவாளர்கள் தொழிலின்றி பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள 1,500 கைத்தறி நெசவாளர்கள், மூலப்பொருள்கள் இல்லாத காரணத்தால் தொழிலை இழந்துள்ளனர்.

நூல் மற்றும் உபகரணங்கள், இரசாயனப் பொருள்கள் இல்லாத காரணத்தால் யாழ். மாவட்டத்தில் உள்ள 1,000 கைத்தறிகள் இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான கைத்தறி மூலப் பொருட்களை உடனடியாக அனுப்புமாறு கைத்தறி மற்றும் புடவைக் கைத்தொழில் அமைச்சை யாழ் மாவட்ட நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் கூட்டுறவு ஆணையாளர் ஊடாகக் கேட்டுள்ளது. (153)

### அம்பாறையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துவில், அக்கரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருபது ஆயிரம் மக்கள் அகதிகளாகியுள்ளனர். பல ஆயிரக்கணக்கான வயல்கள் நீரில் மூழ்கியுள்ளன வீதிகள் போக்குவரத்துச் செய்ய முடியாமல் வெள்ளத்தால் மூழ்கப்பட்டுள்ளது. (எஸ்)

### திருமலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்,

இச்சம்பவத்தைத் தொடர்ந்து, சிறிலங்காவின் அவ்ரோ விமானம் ஒன்றும், இரண்டு பொம்மர் விமானங்களும் பன்மதவாச்சி காட்டுப் பகுதியில் பலத்த குண்டுத் தாக்குதலை நடத்தின.

விடுதலைப்புலிகளினால் அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களில் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டது இதுவே முதல்தடவை என்று பி. பி. சி. தெரிவித்தது. (ரி-வி)

### 2ம் கட்ட

## உணவுப் பொருள்

[பளை]

விசேட உலர் உணவு நிவாரணத்திட்டத்தின் இரண்டாம்கட்ட விநியோகம் பளை பகுதியில் 21ம் திகதி வழங்கப்படவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் சகல கிராமசேவை அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

பளைப்பகுதிக்கு மூன்று மாதத்திற்கு தேவையான உணவுப் பொருட்கள் கப்பல் மூலம் அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### யாழ்.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

என உயர் கல்வி அமைச்சர் அத்துலத் முதலி தெரிவித்தார்,

இது குறித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வைத்தியபீட மாணவர்கள் தமது ஆட்சேபனையை பல்கலைக்கழக மானியக் குழுவுக்குத் தெரிவித்துள்ளனர். (எஸ்)

# தமிழீழ மாணவர் எழுச்சி நாள்

(வட்டுக்கோட்டை)

தமிழீழ மண்ணின் மீட்பிற்காகவும் மக்களை அந்நியப் படையின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பதற்காகவும் அந்நியப்படையுடன் நேரடிமோதலில் ஈடுபட்டு வீரமரணத்தை தழுவிய மேஜர் முரளி, கப்டன் காந்தி, ரஞ்சன், அமுதன், நிரா, லெப் தர்சினி, சதா, நிகிந்தா, நிதி, நிர்மலா ஆகியோரையும் மேலும் அவர்களின் வழியில் நடைபயின்ற மாணவர்களையும் நினைவு கூர்ந்து இம்மாதம் 21ம் திகதி முதல் 23ம் திகதி வரை மாணவர் எழுச்சிநாளாகக் கொண்டாட விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் தீர்மானித்துள்ளது.

இந்த மூன்று நாட்களிலும் இடம் பெறும் நிகழ்ச்சிகளில் அனைத்து தமிழ் ஆசிரியர்கள், மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு மாணவர் அமைப்பு கேட்டுள்ளது.

21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கல்விக் கோட்ட மட்டத்தில் மாணவர் பொது அறிவுப் போட்டி, பேச்சுப் போட்டியும் 22-ஆம் திகதி சனிக்கிழமை மேஜர் முரளியின் ஞாபகமாக ஆசிரியர், மாணவர்களுக்கு கோட்ட ரீதியாக இரத்தம் பரிசோதித்து அட்டை வழங்குதலும் 23-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாணவர் எழுச்சி ஊர்வலமும் மேஜர் முரளியினதும் அவருடன் களத்தில் மரணித்த போராளிகளினதும் கல்வெட்டுக்கள் திரைநீக்கம் செய்யப்பட்டு எழுச்சிக் கூட்டமும் நடைபெறவுள்ளன. (139)

# நல்லெண்ணை கலப்படம் மனிதாபிமானமற்ற செயல்

(காங்கேசன் துறை)

''நல்லெண்ணையில் கலப்படம் செய்வது மனிதாபிமானமற்ற செயலாகும். உணவுக்கும் மருந்துக்கும் பயன்படும் நல்லெண்ணையை தரமாகத் தயார் செய்து நியாயமான விலையில் விற்பனைக்கு விடாமல் வியாபார நோக்கில் செயற்படுவது சட்டப்படி குற்றமாகும்''

இவ்வாறு நல்லெண்ணை உற்பத்தியாளர்களுக்கான கருத்தரங்கொன்றில் கலந்து பேசிய யாழ். மாவட்ட உணவு மருந்து பரிசோகர் திரு. த. மகாதேவன் கூறினார்.

பிரான்பற்று சனசமூக நிலையமண்டபத்தில் பண்டத்தரிப்பு பிரதேசசபை உத்தியோகத்தர் திரு. யோகநாதன் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

இறுதியில் கூடிய அளவில் நல்லெண்ணையைத் தரமுடையதாகத் தயாரித்து, விற்பனைக்கு விடுவதாக இணக்கம் காணப்பட்டது. (86)

# உபகரணங்கள் இருந்தும் பயன்படுத்த முடியாத நிலை

(உடுவில்)

வலிகாமம் வடக்கு பிரதேச சபைகளின் விதித்திருத்த வேலைகளுக்காக சுமார் ஐந்து லட்சம்ரூபாசெலவில் வாங்கப்பட்டுள்ள தார், ஒன்றரை லட்சம் ரூபா செலவில் வாங்கப்பட்ட மின்சார உபகரணங்கள் மற்றும் பெறுமதி வாய்ந்த பொருள்கள் எதையும் அங்கிருந்து எடுக்கமுடியாத சூழ்நிலை நிலவிவருகின்றது.

பிரதேச சபைகளுக்குச் சொந்தமான சொத்துக்கள், ஆவணங்கள் போன்றவற்றை மீட்டெடுத்து மக்களுக்குப் பயன்படுத்தமுடியாத நிலையில் மேற்படி பிரதேச சபைக் காரியாலய ஊழியர்கள் தற்காலிகமாக உடுவில் இராமநாதன் கல்லூரியில் கடமையாற்றிவருகின்றனர். (109)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கிலவ் லேனில் மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு மார்கழி மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/160306/81.